ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1838/11 - 2013 නොවැම්බර් මස 26 වැනි අඟහරුවාදා - 2013.11.26

*1838/11 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## *மாகாண சபை அறிவித்தல்கள்*

### மேல் மாகாண மாகாண சபை

*1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மேல் மாகாண மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையின் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு 7 (1) - (2) மற்றும் 1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மேல் மாகாண மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 5 - 6 ஆம் பிரிவின் கீழ் உள்ள விதிகள்*

*1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மேல் மாகாண மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையின் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு 7 (1) - (2) மற்றும் 1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மேல் மாகாண மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 5 - 6 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மேல் மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் பஸ் வண்டிகளில் பயணஞ் செய்யும் பயணிகளுக்கு சிறந்த வினைத்திறன்மிக்க சேவையினை வழங்குதல் தொடர்பாகத் தொகுக்கப்பட்டுள்ள விதிகள் கீழ்வருமாறு என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

எச். எம். உபாலி கொடிகார,
போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார
அலுவல்கள், கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கலும் விநியோகமும்
கிராம அபிவிருத்தி அலுவல்களுக்குமான அமைச்சர்.

*2013, நவெம்பர் 1.*

இவ்விதிகள் மேல் மாகாணத்தில் செயற்படும் தனியார் பஸ் வண்டிகளின் செயற்பாட்டினை ஒழுங்குபடுத்துவதற்காக புதிய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல் தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்விதிகள் 2013, நவெம்பர் 1 ஆந் திகதி முதல் மேல் மாகாணத்தினுள்ளே அமுல் செய்யப்படுகின்றன.

**நிபந்தனைகளை விதித்தல்**

* பயணிகளுக்கு முற்செலுத்துகை அட்டையினைப் பயன்படுத்தக்கூடிய, அதிகார சபையின் அனுமதிபெற்ற மின் அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் இயந்திரங்களை பஸ் வண்டிகளில் பயன்படுத்துவதற்கான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும் .

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

* சிறந்த செயற்றிறனைக் கொண்ட பஸ் பயணங்களை மேற்கொள்வதற்கு அவசியமான நவீன தொழில்நுட்ப முறைமையினைப் பயன்படுத்தும் விதத்தில் அதிகார சபையின் அனுமதிபெற்ற GPS தொழில்நுட்பத்தைக் கொண்ட உபகரணத்தை பஸ் வண்டியில் பொருத்தியிருத்தல் வேண்டும்.

* அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய முறைமையில் பஸ் நடத்துநர்கள் (ஊழியர் குழாம்) பங்குபெறுதல் வேண்டும்.

12- 433

---

**பிழை திருத்தம்**

சப்பிரகமுவ மாகாண மாகாண சபை

**1990 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதி நியதிச்சட்டம்**

77(1)அ மற்றும் 40(2) ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை

2013.11.05 ஆந் திகதிய 1835/10 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் சப்பிரகமுவ மாகாண மாகாணசபையின் கீழே குறிப்பிடப்பட்ட அறிவித்தலிற்குரியதாக பிரசுரிக்கப்பட்டுள்ள 685/ 2 ஆம் இலக்க அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள "(ஆ) விண்ணப்பப்படிவ இல. பிசீ/எஸ்ஏபி/எஸ்டி /பீஎஸ் - 1 - இல. 00001 " என்பது "(ஆ) விண்ணப்பப்படிவ இல. பீபி/எஸ்ஏபீ/எஸ்டி/பீஎஸ் - 1 - இல. 00001" என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

மஹிபால ஹேரத்,
முதலமைச்சர்
சப்பிரகமுவ மாகாகண மாகாண சபை.

12- 396

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.